# வெற்றிடங்கள்

## செயற்றிட்ட பணியாளர்களை ஆட்சேர்த்தல்

## ஒன்றிணைந்த நீரேந்து பிரதேசங்கள் மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவ செயற்றிட்டம் (IWWRMP)

## கமத்தொழில், கால்நடை, காணிகள் மற்றும் நீர்ப்பாசன அமைச்சு

IWWRMP

ஒன்றிணைந்த நீரேந்து பிரதேசங்கள் மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவ செயற்றிட்டத்திற்கு (IWWRMP) அரசாங்க ஆட்சேர்ப்பு நடைமுறை மற்றும் 02/2026ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் சுற்றுநிருபத்தின் (MSD) பிரகாரம் ''ஒப்பந்த அடிப்படையில்'' முழு நேர வேலைக்கு பின்வரும் செயற்றிட்ட முகாமைத்துவ பணியாட்தொகுதியின் பதவிகளுக்கு ஆட்சேர்ப்பதற்காக தகுதி வாய்ந்த இலங்கைப் பிரஜைகளிடமிருந்து இத்தால் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

பதவிக்கான சம்பளம், 2ஆம் இணைப்பின் 2ஆம் பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் இருக்கும். மேலும், ஆட்சேர்ப்புக்கான அடிப்படைத் தகுதிகள் மற்றும் அனுபவம் ஆகியவை 2026-03-28ஆம் திகதிய 02/2026ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் சுற்றுநிருபத்தின் (MSD) பிரகாரம். 01ஆம் இணைப்பின் 2ஆம் பத்தியில் விரிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளன.

**வெற்றிட விபரங்கள்**

| பதவி | 02/2026ஆம் இலக்க MSD சுற்றறிக்கையின் பிரகாரம் வகுதி | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| சிரேஷ்ட செயற்றிட்ட நிபுணர் (பெறுகை மற்றும் ஒப்பந்தங்கள்) | C | 1 |

**பொதுவான நிபந்தனைகள்**

1. விண்ணப்பதாரர்கள் 64 வயதிற்கு உட்பட்டவர்களாக இருக்க வேண்டும். ஆங்கிலத்தில் புலமை மற்றும் அரசாங்க விதிமுறைகள் குறித்த பரிச்சயம் இருக்க வேண்டும் என்பதுடன் கணனி அறிவும் ஒரு அத்தியாவசிய முன்நிபந்தனையாகும். இலங்கையில் வெளிநாட்டு நிதியுதவி பெற்ற திட்டங்களில் பெற்ற வேலை அனுபவம் ஒரு மேலதிக தகுதியாகக் கருதப்படும்.
2. தற்போது அரசாங்க சேவை / அரை அரச துறையில் பணியாற்றும் விண்ணப்பதாரர்கள் தங்கள் விண்ணப்பங்களை திணைக்களத்தின் தலைவரின் ஊடாக அனுப்புதல் வேண்டும்.
3. மேலதிக விபரங்களுக்கு www.iwwrmp.lk எனும் இணையதளத்திற்குப் பிரவேசிக்கவும்.
4. மேலே குறிப்பிடப்பட்டுள்ள சுற்றறிக்கையை நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவித்தி அமைச்சின் இணையதளத்தைப் பார்க்கவும்.
5. விண்ணப்பங்களை 2026 ஆகஸ்ட் 17ஆம் திகதி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் பதவியின் பெயரைத் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.

**செயற்றிட்டப் பணிப்பாளர்,**
**ஒன்றிணைந்த நீரேந்து பிரதேசங்கள் மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவ செயற்றிட்டம் (IWWRMP)**
**2ஆம் மாடி, மகாவலி நிலையம்,**
**இல. 96, ஆனந்த குமாரசாமி மாவத்தை,**
**கொழும்பு-07.**
**தொலைபேசி: 011 2691163**
**இணையதளம்: www.iwwrmp.lk**

**குறும் பட்டியலிடப்பட்ட விண்ணப்பதாரர்கள் மட்டுமே நேர்முகத் தேர்விற்கு அழைக்கப்படுவர். ஆதரவு தேடுதல் தகுதியீனமாகக் கருதப்படும் என்பதுடன் அத்தகைய விண்ணப்பதாரர்களின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.**

**செயற்றிட்டப் பணிப்பாளர்,**

**ஒன்றிணைந்த நீரேந்து பிரதேசங்கள் மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவ செயற்றிட்டம் (IWWRMP)**

gazette.lk SINCE 2014